
புனித யூதா ததேயுஸ் நவநாள்
புனித யூதா ததேயுஸ் திருத்தலம்
சுவாமியார் மடம்



**விண்ணப்பங்கள் நன்றியறிதல்கள், காணிக்கைகள்**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**சங். அதிபர்**
புனித யூதா ததேயுஸ் திருத்தலம்
**சுவாமியார் மடம்,**
கட்டாத்துறை அஞ்சல், குமரி மாவட்டம் – 629 158
போன் : 04651 – 276170

# திருத்தல நிகழ்வுகள்

1. **திருப்பலி நேரம் :**

**வார நாட்கள் :** காலை 7.00 மணி

**வியாழன் நவநாள் திருப்பலி :**

காலை 6.30 மணி, 10.00 மணி மாலை : 4.30 மணி

**ஞாயிறு :** காலை : 9.00 மணி

2. **நற்செய்தி கொண்டாட்டம் ஆராதனை :**

**எல்லா புதன் கிழமை**

மாலை 6 .00 மணி முதல் 8.30 மணி வரை

3. **தியானம் :**

**தமிழ் : மாதத்தின் முதல் வியாழன்**

காலை 9.00 மணி முதல் 2.30 மணி வரை.

**மாதத்தின் முதல் வெள்ளி, சனி :**

மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை.

**மாதத்தின் நான்காம் வெள்ளி, சனி :**

காலை 10.00 மணி முதல் மதியம் 2.30 மணி வரை மற்றும் மாலை 6.00 முதல் இரவு 8.00 மணி வரை.

**மலையாளத்தியானம் :**

**மாதத்தின் 4 ஆம் வியாழன்**

காலை 9.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை.

**4. இரவு விழிப்பு ஜெபம் :**

**மாதத்தின் 2 ஆம் சனிக்கிழமை**

இரவு 9.00 மணி முதல் ஞாயிறு காலை 4.00 மணி வரை. இறுதியில் திருப்பலியுடன் நிறைவு பெறும்.

**5. நோயுற்றோருக்கான சிறப்பு வழிபாடு :**

**மாதத்தின் இரண்டாம் வியாழன்**

காலை 10.00 மணி நவநாள் திருப்பலி.

**6. மது, மனநோய் நல உதவி :**

வியாழன் காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரை

மதுவுக்கு அடிமையானவர்கள்

மனநோய் பாதித்தவர்களுக்கு ஆலோசனை

மற்றும் மருந்து வழங்கப்படுகிறது.

# புனித யூதா ததேயுஸ் திருத்தல வரலாறு

## சுவாமியார் மடம்

முக்கடலும் சங்கமிக்கும் குமரி மாவட்டத்தில் முக்கனியும் பரந்து விளையும் நாஞ்சில் நாட்டின் எழில் மிகு சிற்றூர் சுவாமியார் மடம். நாகர் கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நாகர் கோவிலிலிருந்து சுமார் 14 கல் தூரத்தில் யாரும் அறியாத ஓர் சிற்றூராகவே இருந்தது. 1967 ஆம் ஆண்டு **அருட்தந்தை ஜெரோம்,** OCD., அவர்களின் முயற்சியால் சாமியார் மடம் சந்தையிலிருந்து 1 பர்லாங்கு வடக்கில் மேக்கோடு சாலையில் சீற்றத்துடன் செல்லும் சிற்றாறு பட்டணங் கால்வாய் பக்கத்தில் எப்பக்கமும் பச்சைப் பசேலென்று பூத்துக் குலுங்கும் வயல் வெளிகளுக்கு அருகில், எங்கு நோக்கினும் வானுயர வளர்ந்து நிற்கும் பனை மரங்களுக்கு மத்தியில் 1 ஏக்கர் 1 சென்ட் இடம் வாங்கி ஒரு சிற்றாலயத்தை கட்டி அதை புனித யூதா ததேயுவுக்கு அர்ப்பணித்தார். அதே ஆண்டு **அருட்தந்தை. ஸ்டிபன்,** OCD., அவர்களின் முயற்சியால் பார்ப்பவர்களுக்கு பரவசமூட்டும் எழில்மிகு

தோற்றத்துடன் புனிதரின் திரு உருவம் மங்களூரிலிருந்து வரவழைக்கப்பட்டது. 1968 அக்டோபர் மாதம் 6 ஆம் நாள் ஞாயிறு மாலை 6.00 மணிக்கு அன்றைய கோட்டாறு ஆயர் **T.R. ஆஞ்ஞிசாமி, S.J.D.D.**, அவர்களால் ஆலயம் புனிதப்படுத்தப்பட்டு மக்கள் வழிபாட்டுக்கு வர துவங்கினர்.

இச்சிற்றூரில் வாழ்ந்த **அந்தோணி முத்து** என்னும் நீண்ட தாடியுடன் துறவி போன்று காட்சி தரும் குடும்பத்தலைவர் தான் இப் பகுதியில் கிறிஸ்துவம் தழைக்க உதவியவர்.

இவருக்கு ஆண்மக்கள் 6 பேர். இவர்கள் யாவரும் தங்கள் தந்தையோடும் **அருட்திரு. சிக்ஸ்டஸ், OCD.**, அவர்களோடும் சேர்ந்து அயராது உழைத்து இத்திருதல வளர்ச்சியில் வித்திட்டவர்கள்.

நவநாள் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே சாரை சாரையாக மக்கள் கூட்டம் கேரளா மற்றும் கடற்கரை பகுதியிலிருந்து ஆயிரமாயிரம் மக்கள் கூடினர். ஒவ்வொரு நாளும் ஏராளமான நன்றி கடிதமும் விண்ணப்பங்களும் குவியத் தொடங்கின. கூட்டத்தை கட்டுப்படுத்தி மக்கள் அனைவரும்

வழிபாடுகளில் நன்கு பங்கு பெற ஒரு பெரிய பந்தல் போடப்பட்டு ஆயிரக்கணக்கானோர் அமரக்கூடிய விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஏன் இந்த கூட்டம், இங்கு என்னதான் நடக்கிறது ? காரணம், இப்புனிதர் கைவிடப்பட்டவர்களின் காவலர், நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கை, இயலாதவற்றை இயற்றுபவர், ஆழ்ந்த தாழ்ச்சியும், மிகுந்த பொறுமையும் உள்ளவர். பெருந்தியாகி. தப்பறைகளைப் பரப்பியவரைக் கண்டித்தவர், இயேசுவின் ஒன்று விட்ட சகோதரர், திருகுடும்பத்தின் நெருங்கிய உறவினர், இயேசுவின் திருஉருவச் சாயலை நெஞ்சில் தாங்கியவர். இப்படிப்பட்டவர் ஆற்றல் அற்றவராக இருக்க முடியுமா ?

இன்று இது திருத்தலம் மட்டுமன்று பொது நிலையினரின் ஆன்மீக மையமாகவும் திகழ்கிறது. எப்போதும் செப மணம் கமழும் இடமாக திகழ்கிறது என்றால் மிகையாகாது. ஒவ்வொரு நாளும் நடைபெறும் நிகழ்வுகளை பார்த்தாலே நமக்கு நன்கு தெரியும்.

ஒவ்வொரு நாளும் ( ஞாயிறு தவிர ) இரண்டு சகோதரிகள் ஒரு சகோதரர் காலை 9.00 மணி முதல்

மாலை 5.00 மணி வரை மக்களின் விண்ணப்பங்களை வைத்து பரிந்துரை செபம் செய்கின்றனர். எல்லா புதன் கிழமைகளிலும் மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நற்செய்தி கொண்டாட்டமும் நற்கருணை ஆராதனையும், மற்றும் மாதத்தின் முதல் வியாழன், வெள்ளி, சனி நாட்களில் தமிழ் தியானமும், மாதத்தின் 4 ஆம் வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் மலையாள தியானமும் நடக்கிறது. மற்றும் மாதத்தின் 2 ஆம் சனி இரவு 9.00 மணி முதல் அடுத்த நாள் ஞாயிறு காலை 5.00 மணி வரை விழித்திருந்து செபமும் நடக்கிறது. இவ்வாறாக இத்திருத்தலத்தில் மக்களின் ஆன்மீக தேவைகள் அபரிமிதமாக கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முன் வரும் வெள்ளிக்கிழமை கொடி ஏற்றப்பட்டு 10 நாட்களுக்கு புனிதருக்கு விழா கொண்டாடி அவர் புகழை கை விடப்பட்டவர்களுக்கு காவளர் என்பதை அறிக்கை இடுகிறோம்.

அருட்பணி. **அருள்ராஜ்,** OCD.,
திருத்தல அதிபர்.

# புனித யூதா ததேயுஸ்
## வாழ்க்கை வரலாறு

**புனித யூதா ததேயுஸ் :**

இயேசுவின் ஒன்றுபட்ட சகோதரர் (மத்தேயு 13 : 55). பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவர். அல்பேயுவின் மகன். அல்பேயுவுக்கு கிளையோபாஸ் என்று இன்னொரு பெயரும் உண்டு. அல்பேயுஸ் ( கிளையோபாஸ் ) புனித சூசையப்பரின் சகோதரர். இவர் தாய் மேரி கிளையோபாஸ், இவள் புனித கன்னிமரியாளுக்கு நெருங்கிய உறவினள். எனவே புனித யூதா ததேயுஸ் புனித கன்னிமரியாளுக்கும், புனித சூசையப்பருக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் நெருங்கிய உறவினர்.

ஆதிக் கிறிஸ்தவர்களால் மாட்சிமையுடன் வணங்கப்பட்டு வந்தவர் புனித யூதா ததேயுஸ். இருந்த போதிலும் காலப்போக்கில் கர்த்தரைக் காட்டிக் கொடுத்த துரோகிக்கு ஏது, வணக்கம் ? என்று யூதாஸ் இஸ்காரியோத்துடன் உள்ள பெயர் ஒற்றுமையால் மக்களிடையில் வணக்கம் இழந்தவர். மறக்கப்பட்ட புனிதர் ஆனவர்.

வணக்கம் குறைவை நிறைவு செய்ய விழைந்தார் நம் ஆண்டவர். அரிய வரங்களாலும் சிறப்புக் கொடைகளாலும் புனிதரை அலங்கரித்தார். தஞ்சம் என அண்டினோரைத் தவறாமல் பாதுகாக்கும் தனி வரங்களைக் கொண்டவராக ஆக்கினார்.

புனித பிரிஜித்தமாளுக்குக் காட்சி கொடுத்து, "*மக்கள் தங்கள் தேவைகளில் எல்லாம் புனித யூதா ததேயுசை மன்றாடட்டும். அவர் தம் பெயருக்கிணங்க தாராளமாய் உதவுவார்*" என்று அறிவித்தார் நம் ஆண்டவர். கைவிடப்பட்டவர்களின் சிறப்புப் பாதுகாவலராகவும், நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையாகவும், இயலாதவற்றை இயற்றுபவராகவும் படிப்படியாக மக்களிடையே மகிமை பெற்றார். மக்களும் உருக்கமாய் அவரிடம் மன்றாடினர். பலன் பெற்று மகிழ்ந்தனர். பக்தி, மறுமலர்ச்சியுடன் சிறக்கத் தொடங்கியது.

## பரம்பரை வரலாறு :

புனித யூதா ததேயுஸ் தன் நெஞ்சில் இயேசுவின் திருமுகச்சாயலை அணிந்தவராக காணப்படுகிறார். இதற்குக் காரணம் இயேசு தம் திருமுகச் சாயலை அவருக்கு அளித்தது தான். இதைப்பற்றி சொல்லப்படும் பரம்பரை வரலாறு இதுதான். எதெசா மன்னன் அபகாரோ ஒரு தொழுநோயாளி. அவன் குணம் பெற வேண்டி இயேசுவிடம் ஆள் அனுப்பினான். அவர் உருவத்தை தீட்டிவர ஓவியனையும் அனுப்பினான். இயேசு தம் திருமுகச்சாயலை புனித யூதா ததேயுஸ் வழியாக அனுப்பி அவனுக்கு சுகம் அளித்தார். சுகம் பெற்ற மன்னனும் அவன் மக்களில் பலரும் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டனர்.

## அப்போஸ்தலர் பணி :

பரிசுத்த ஆவியைப் பெற்றபின் புனித யூதா ததேயுஸ் மெசப்பட்டோமியோவிலும் பெர்சியாவிலும் மறை பரப்பினார். அநேகர் மனந்திரும்பினர்.

## வேதசாட்சி :

புனித யூதா ததேயுஸ் ஒரு கையில் தடி வைத்திருப்பது அவர் வேதசாட்சியாக இருந்த விதத்தைக் குறிக்கிறது. அவர் உணர்விழக்கும் வரை அடிக்கப்பட்டார். பிறகு அவர் தலை வெட்டப்பட்டார். அவரது உடல் உரோமாபுரிக்கு கொண்டுவரப்பட்டு தூய பேதுரு பேராலயத்தில் உள்ள சுரங்கக்கல்லறையில் வைக்கப்பட்டிருக்கிறது.

## ததேயுஸ் :

புனித யூதாவுக்கு ததேயுஸ் என்பது காரணப்பெயர். சீரியா மொழியில் ததேயுஸ் என்ற வார்த்தைக்கு " *அன்புக்குரியவர், அன்பு செய்கிறவர்* ", என்று பொருள்.

## நவநாள் பக்தி முயற்சி :

வல்லமை வாய்ந்த புனிதரின் திருவிழாவைத் திருச்சபை ஆண்டுதோறும் அக்டோபர் 28-ம் நாள் கொண்டாடுகிறது. முன் ஆயத்த நவநாள் அக்டோபர் 19-ம் நாளில் ஆரம்பமாகும். ஆனால் நமக்குத் தேவையான எல்லா வேளைகளிலும் புனிதரிடம் நவநாள் செய்து நன்மைகளை அடையலாம். வாரந்தோறும் ஒரு

நாடி வரும் எங்களுக்காக இறைமகன் இயேசுவை மன்றாடும்.!.

*( முழந்தாளிடவும் )*

## உ. புனிதருக்குப் புகழுரை

குரு : அன்புச் சகோதரரே,

"இறைவன் நமது புனிதர்களிடத்தில்
வியப்புக்குரிய விதமாய் விளங்குகிறார்".

( சங்கீதம் 67:32 )

"புனிதர்களோ இறைவனைப்
பின்பற்றுகிறவர்களாயிருந்தார்கள்".

( எபேசியர் 5:1 )

ஆகவே நாமும் வல்லமை வாய்ந்த புனித
யூதா ததேயுசை மன்றாடி வாழ்வில்
வளம் பெறுவோமாக !
இறை அன்பால் ஈர்க்கப் பெறுவோமாக!.

குரு : பன்னிரு சீடர்களில் ஒருவரான புனித யூதா ததேயுசே,

எல் : உம்மை நாங்கள் வாழ்த்துகிறோம் !.

குரு : இயேசுவின் நெருங்கிய உறவினரான புனித யூதா ததேயுசே,



எல் : உம்மை நாங்கள் வணங்குகிறோம் !.

குரு : அண்டினோரை ஆதரிக்கும் தயாள உள்ளங் கொண்ட புனித யூதா ததேயுசே

எல் : உமக்கு நன்றி கூறுகிறோம்.!.

## 3. புனித யூதா ததேயுசை நோக்கி சிறப்பு நவநாள் செபம்.

குரு : புனித யூதா ததேயுசின் / வல்லமையுள்ள மன்றாட்டில் நம்பிக்கை வைத்து / அவர் புகழைப் பாடுவோமாக / அவைகளை அவருக்கு அளித்த / இறைவனுக்கு / நன்றி கூறுவோமாக / நமது வரங்களைப் தேவைகளையும் / தப்பாமல் அடைந்து தரக் / கெஞ்சி மன்றாடுவோமாக.

எல் : மாட்சிமை மிக்க அப்போஸ்தலரும் / வேதசாட்சியுமான / புனித யூதா ததேயுசே / எங்கள் ஆண்டவரும் மீட்பருமான / இயேசு கிருஸ்துவின் / நெருங்கிய உறவினரே / புண்ணியங்கள் / மின்னித் துலங்கும் தூயவரே / புதுமை வரங்களில் சிறந்தவரே / தம்மைத் தேடி வந்தவர்களை தப்பாமல்

நாளிலோ ஒன்பது நாட்கள் தொடர்ந்தோ, அல்லது ஒரே நாளில் மணிக்கு ஒரு முறையாக ஒன்பது தடவையோ செய்வது நமது தேவையைப் பொறுத்தது. வசதியைச் சார்ந்தது !. இது மிக பயனுள்ள பக்தி என்பதற்கு ஐயமில்லை.

இதனால் புனித யூதாவின் பக்தி பாரெங்கும் பரவி பல நலன் புரிவதாக.

புனித யூதா ததேயுசே, எங்களுக்காகவும் உமது உதவியை மன்றாடும் அனைவருக்காகவும் வேண்டிக்கொள்ளும்.

# புனித யூதா ததேயுஸ் நவநாள்

## 1. ஆரம்பகீதம்

1. கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதா ததேயுஸ் அப்போஸ்தலரே, உம்மை நாடிவரும் எங்களுக்காக இறைமகன் இயேசுவை மன்றாடும்.
2. இயலாதவற்றை இயற்றுபவரான புனித யூதா ததேயுஸ் அப்போஸ்தலரே, உம்மை நாடி வரும் எங்களுக்காக இறைமகன் இயேசுவை மன்றாடும்.
3. நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையான புனித யூதா ததேயுஸ் அப்போஸ்தலரே, உம்மை

நாடி வரும் எங்களுக்காக இறைமகன் இயேசுவை மன்றாடும்.!.

*( முழந்தாளிடவும் )*

## உ. புனிதருக்குப் புகழுரை

குரு : அன்புச் சகோதரரே,

"இறைவன் நமது புனிதர்களிடத்தில்
வியப்புக்குரிய விதமாய் விளங்குகிறார்".

( சங்கீதம் 67:32 )

"புனிதர்களோ இறைவனைப்
பின்பற்றுகிறவர்களாயிருந்தார்கள்".

( எபேசியர் 5:1 )

ஆகவே நாமும் வல்லமை வாய்ந்த புனித
யூதா ததேயுசை மன்றாடி வாழ்வில்
வளம் பெறுவோமாக !
இறை அன்பால் ஈர்க்கப் பெறுவோமாக !.

குரு : பன்னிரு சீடர்களில் ஒருவரான புனித யூதா ததேயுசே,

எல் : உம்மை நாங்கள் வாழ்த்துகிறோம் !.

குரு : இயேசுவின் நெருங்கிய உறவினரான புனித யூதா ததேயுசே,

எல் : உம்மை நாங்கள் வணங்குகிறோம் !.

குரு : அண்டினோரை ஆதரிக்கும் தயாள உள்ளங் கொண்ட புனித யூதா ததேயுசே

எல் : உமக்கு நன்றி கூறுகிறோம்.!.

## 3. புனித யூதா ததேயுசை நோக்கி சிறப்பு நவநாள் செபம்.

குரு : புனித யூதா ததேயுசின் / வல்லமையுள்ள மன்றாட்டில் நம்பிக்கை வைத்து / அவர் புகழைப் பாடுவோமாக / அவைகளை அவருக்கு அளித்த / இறைவனுக்கு / நன்றி கூறுவோமாக / நமது வரங்களைப் தேவைகளையும் / தப்பாமல் அடைந்து தரக் / கெஞ்சி மன்றாடுவோமாக.

எல் : மாட்சிமை மிக்க அப்போஸ்தலரும் / வேதசாட்சியுமான / புனித யூதா ததேயுசே / எங்கள் ஆண்டவரும் மீட்பருமான / இயேசு கிருஸ்துவின் / நெருங்கிய உறவினரே / புண்ணியங்கள் / மின்னித் துலங்கும் தூயவரே / புதுமை வரங்களில் சிறந்தவரே / தம்மைத் தேடி வந்தவர்களை தப்பாமல்

ஆதரிக்கும் / தயாள உள்ளங் கொண்டவரே / உம்மை நாங்கள் வாழ்த்துகிறோம். / வணங்குகிறோம். இந்த அற்புத வரங்களை உமக்களித்த / அன்புத் தேவனுக்கு ஆராதனை செலுத்துகிறோம் / இதய பூர்வமான / நன்றி நவில்கிறோம். எங்களுக்குத் தேவையான / ஆத்ம சரீர நலன்களையெல்லாம் / அடைந்து தந்தருள / உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம் / சிறப்பாக / இப்போது எங்களுக்கு மிகவும் அவசியமான / இந்த வரங்களைப் பெற்றுத் தாரும்.

குரு : இங்கே சிறிது நேரம் மௌனமாக உங்கள் முக்கிய தேவைகளை எடுத்துக் கூறுங்கள். (மௌன மன்றாட்டு )

எல் : நேசிக்கப்படத்தக்கவரும் / உள்ளப்பண்பாடு உடையவரும் இறை புகழைப் பாடுபவருமான / பெயர் பெற்று இலங்கும் / தயாள இருதய ததேயுசே / உமது வல்லமையில் / எங்கள் நம்பிக்கை வீண்போக விடாதேயும். கர்த்தர் துரோகியின் / பெயர் / ஒற்றுமையால்

/ உமக்கு நேர்ந்த / பக்தி குறைவை பரிகரிக்க
/ வகையின்றி / வாடுவோருக்கு /
வல்லமையுடன் உதவி புரியும் / அரிய
வரத்தை / இறைவன் உமக்கு
அளித்திருக்கிறார் என்பதை / நினைவு
கூர்ந்தருளும் / இப் பெரிய வரத்திற்காக /
நாங்களும் / உம்முடன் சேர்ந்து /
இறைவனின் புகழைப் பாடத் துணைபுரியும்
அவருக்கு நன்றி செலுத்தத் / தயை செய்யும்.
நீர் எங்களுக்குச் செய்கின்ற /
இப்பேருதவிக்காக / எங்கள் வாழ்
நாளெல்லாம் / நாங்கள் உமக்கு / நன்றி
உள்ளவர்களாய் இருப்போம் / உமது
வல்லமையுள்ள மன்றாட்டை /
மக்களிடையில் அறியச் செய்வோம்.
பலர் அறியாப் புனிதரே / சிறப்பு இயல்புகள்
பல படைத்தவரே / பலன் தரும் உமது பக்தி
பாரெங்கும் பரவ / எங்களால் ஆன
பிரயாசையெல்லாம் / எடுப்போம் என்றும் /
உறுதியாய் வாக்களிக்கிறோம்.
ஆமென்.

**4. பாடல்** ( எழுந்து நிற்கவும் )

( 34–ம் பக்கம் பார்க்கவும் )

**5. விண்ணப்பங்களையும், நன்றியறிதல்களையும் வாசித்தல்**

( உட்காரவும் )

**6. விசுவாசிகளின் மன்றாட்டு**

( எழுந்து நிற்கவும் )

குரு : சகோதரரே, இறைவன் தம் புனிதர்கள் வழியாக அருள் வரங்களைப் பொழிகின்றார். அப்போஸ்தலரும் வேத சாட்சியும், நம்பிக்கை இழந்தோரின் நம்பிக்கையும், இயலாதவற்றை இயற்றுபவருமான புனித யூதா ததேயுசின் வல்லமை உள்ள பரிந்து பேசுதலில் நம்பிக்கை வைத்து அவர் வழியாக இறைவனை வேண்டுமாறு இங்கே கூடியிருக்கின்றோம்.

குரு : பிறப்பிலும் வாழ்விலும், இறப்பிலும், இயேசுவோடு நெருங்கிய உறவு கொண்டு விளங்கிய புனித யூதாததேயுசைப் போல் நாங்களும் இயேசுவோடு என்றும் இணைந்து வாழும் படியாக.

எல் : புனித யூதா ததேயுஸ் / வழியாக / ஆண்டவரே / உம்மை மன்றாடுகிறோம்.

குரு : ஆன்ம தாகத்தால் அயராது உழைத்து கிறிஸ்துவை அறியாதோர் அவரை அறிய விசுவாச ஒளியை ஏற்றிய புனித ததேயுசைப் போல் நாங்களும் ஆன்ம மீட்பில் அக்கரை உள்ளவர்களாகவும், விசுவாச வாழ்க்கையில் கிறிஸ்துவை அறியச் செய்கிறவர்களாகவும் விளங்கும் படியாக

எல் : புனித யூதா ததேயுஸ் வழியாக / ஆண்டவரே / உம்மை மன்றாடுகிறோம்.

குரு : தப்பறையான கொள்கைகளை பரப்பியவர்களைக் கண்டித்து, மெய்மறைத் தழைத்தோங்கும்படி கிறிஸ்தவர்களுக்கு திருமுகம் எழுதி, விசுவாசத்தைக் காத்த புனித யூதா ததேயுசை போல நாங்களும் திருச்சபையின் போதனைக்கு எதிரானவற்றை அகற்றி, தப்பறைகளின்றி பாதுகாக்கப்பட்டு விசுவாசத்தில் உறுதி உள்ளவர்களாய் வாழும்படியாக.

எல் : புனித யூதா ததேயுஸ் வழியாக / ஆண்டவரே / உம்மை மன்றாடுகிறோம்.

குரு : இறைமகனின் விண்ணேற்றத்திற்குப் பின் அவரது ஆணைப்படியே எதெஸ்ஸா நாட்டிற்குச் சென்று, தொழு நோயால் அவதியுற்ற அந்நாட்டரசனுக்கு அற்புத சுகம் அளித்த புனித யூதா ததேயுசை மன்றாடிக் கேட்கும் நாங்கள், ஆன்ம சரீர வியாதிகள் அனைத்திலுமிருந்து, பாதுகாக்கப்படும் படியாக,

எல் : புனித யுதா ததேயுஸ் வழியாக / ஆண்டவரே / உம்மை மன்றாடுகிறோம்.

குரு : நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையான புனித யூதா ததேயுசின் மன்றாட்டினால் திருமறை செழிப்புற்று ஓங்கவும், எங்கள் குடும்பங்களில் நீடிய சமாதானமும், நற்சுகமும் நிலவி தேவாசீர் பெருகும்படியாக.

எல் : புனித யூதா ததேயுஸ் வழியாக / ஆண்டவரே / உம்மை மன்றாடுகிறோம்.

குரு : விசுவாசத்திற்காக உயிர் துறந்த புனித யூதா ததேயுசைப் போல் குருக்களும் இறை

மக்களும் விசுவாசத்தில் ஆழ்ந்த பற்றும் ஆர்வமும் கொண்ட வாழ்க்கை நடத்தி, முடிவில்லா மோட்சஞ் சேரத் தகுதி பெறும்படியாக.

எல் : புனித யூதா ததேயுஸ் வழியாக / ஆண்டவரே / உம்மை மன்றாடுகிறோம்.

குரு : இப்பங்கு முன்னேற்றம் அடையவும் இந் நவநாள் செய்வோர் அனைவரும் விரும்பிக் கேட்பவையெல்லாம் விரைவில் பெற்று மகிழும் படியாகவும்.

எல் : புனிதயூதா ததேயுஸ் வழியாக / ஆண்டவரே / உம்மை மன்றாடுகிறோம்.

( தனிப்பட்ட தேவைகளுக்காக மௌனமாய் ஜெபித்தல்)

## 7. நன்றியறிதல் ( முழந்தாளிடவும்)

குரு : அப்போஸ்தலரும் வேத சாட்சியுமான புனித யூதா ததேயுசின் மன்றாட்டால் திருச்சபையில் நீர் செய்துள்ள எல்லா நன்மை உபகாரங்களுக்காகவும்,

எல் : ஆண்டவரே ! நாங்கள் உமக்கு / நன்றி செலுத்துகிறோம்.

குரு : இயலாதவற்றை இயற்றும் புனிதரை மன்றாடி மனுகுலத்தார் அடைந்த ஆன்ம சரீர பேருபகாரங்களுக்காக

எல் : ஆண்டவரே / நாங்கள் உமக்கு / நன்றி செலுத்துகிறோம்.

குரு : கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனிதரின் மன்றாட்டினால் பாவிகள் மனந்திரும்பவும், கடும் பிணியாளர்கள் நலம் பெறவும், நீர் செய்த எல்லா உதவிகளுக்காக

எல் : ஆண்டவரே / நாங்கள் உமக்கு / நன்றி செலுத்துகிறோம்.

குரு : இங்கே உம் திருமுன் குழுமியிருக்கும், நாங்கள் ஒவ்வொருவரும் உமது அப்போஸ்தலரின் பரிந்துரையால் பெற்றுக் கொண்ட எண்ணற்ற நன்மைகளுக்காக

எல் : ஆண்டவரே / நாங்கள் உமக்கு / நன்றி செலுத்துகிறேறாம்.

குரு : புனித யுதா ததேயுசின் மன்றாட்டினால் வேத விசுவாசம் வளர்ச்சி அடைந்து, திருச்சபை பாதுகாக்கப்பட்டு, திருமறையைச் செழிப்புறச் செய்வதற்காகவும், எமது

குடும்பங்களில் சமாதானமும் சந்தோஷமும் நிலவி இறை ஆசிர் பெருகச் செய்வதற்காக,

எல் : ஆண்டவரே / நாங்கள் உமக்கு / நன்றி செலுத்துகிறோம்.

குரு : நாம் அடைந்த தனிப்பட்ட நன்மைகளுக்காக மௌனமாக நன்றி கூறுவோமாக.

( மௌன நன்றியறிதல் )

**8. பாடல்** ( நிற்கவும் )

( 34–ம் பக்கம் பார்க்கவும் )

## 9. மறை நூல் வாசகம்

## 10. மறை உரை

( உட்காரவும் )

## 11. புனிதரின் புகழ்மாலை

( முழந்தாளிடவும் )

ஆண்டவரே இரக்கமாயிரும்,
கிறிஸ்துவே இரக்கமாயிரும்,
ஆண்டவரே இரக்கமாயிரும்,
கிறிஸ்துவே எங்களுக்குச் செவிசாய்த்தருளும்
கிறிஸ்துவே எங்களுக்குத் தயவாய் செவி சாய்த்தருளும்.

பரலோக பிதாவாகிய சர்வேசுரா
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
உலக மீட்பரான சுதன் சர்வேசுரா
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
பரிசுத்த ஆவி சர்வேசுரா,
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
பரிசுத்த திரியேக சர்வேசுரா,
எங்கள் மேல் இரக்கமாயிரும்
பரிசுத்த மரியாயே,
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்,
புனித யூதா ததேயுசே,*
திருக்குடும்பத்தின் நெருங்கிய உறவினரே,*
மாட்சிமை மிக்க அப்போஸ்தலரே,*
தெய்வீக ஆசிரியரின் உத்தம மாணாக்கரே,*
இயேசுவின் பிரமாணிக்கமுள்ள மலரே.*
வேத பராமரிப்புகள் அமைந்த யாத்ரீகரே,*
வேத விசுவாசத்தின் சாட்சியே,*
தரித்திரத்தை நேசித்தவரே,*
தாழ்ச்சிக்கும் பொறுமைக்கும் மாதிரியே,*
கற்பின் லீலியே,*
தேவ அன்பின் தீபமே,*

* எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

புனிதத்தின் விண்மீனே,*
இறையருளின் பேழையே,*
பேய்களை நடுங்கச் செய்கிறவரே,*
திருச்சபையின் தூணே*
துன்புறுவோரின் ஆறுதலே, *
பாவிகளுக்காகப் பரிந்து பேசுபவரே,*
திக்கற்றவர்களின் சகாயமே*
திகைக்கின்றவர்களின் பிரகாசமே,*
நம்பிக்கை இழந்தவர்களின் ஊன்றுகோலே*
வியத்தகு அற்புதங்களை செய்கிறவரே,*
தெய்வ வரங்களை வழங்குவதில் மிகவும் பேறு பெற்றவரே,*
உம்மை மன்றாடுவோர்க்குத் தப்பாமல் உதவி புரிபவரே,*
உம்மிடம் நம்பிக்கை வைப்பவர்களுக்குத் தவறாமல் உதவி செய்கிறவரே,*
அவசரமுள்ளவர்களுக்குத் தாமாகவே வந்துதவும் பேருபகாரியே.*
இக்கட்டான வேளைகளில் உடன் உதவி புரிய வல்லமை வாய்ந்தவரே,*
திக்கற்றவர்களுக்காகப் பரிந்து பேசுவதில் பேறு பெற்றவரே*

---

* எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உம்மை வணங்குவோர்க்கு அன்புள்ள மெய்க்காப்பாளரே,*
எங்கள் சிறப்புப் பாதுகாவலரே,*
உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுவரனின் செம்மறியே,
எங்கள் பாவங்களை போக்கியருளும் ஆண்டவரே
உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுவரனின் செம்மறியே,
எங்கள் மேல் இரக்கமாயிரும் ஆண்டவரே
உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனின் செம்மறியே
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் ஆண்டவரே

குரு : ஜெபிப்போமாக

எல் : எல்லா வல்லமையும் இரக்கமுள்ள மீட்பரான ஆண்டவரே / உமது அளவில்லாத அன்புக்கு உரியவரும் / உமது மனித அவதாரத்தில் நெருங்கியஉறவினரும் அப்போஸ்தலருமான புனித யூதாததேயுஸ் வழியாக / நாங்கள் கேட்கும் மன்றாட்டுகளையெல்லாம் தயவாய் தந்தருளும்படி / உம்மை மன்றாடுகிறோம்.
எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக
ஆமென்.

## 12. புனிதரின் புகழ்மாலை (பாடுவதற்கு)

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
கிறிஸ்துவே பிராத்தனைக் கேட்டருளும்
பரத்தை படைத்த பிதா சர்வேசுரா
எங்களை தயை பண்ணி இரட்சியும்
உலகத்தை மீட்ட சுதன் தேவா *
பரிசுத்த ஆவி சர்வேசுரா *
பரிசுத்த திரியோக சர்வேசுரா *
புனித கன்னி மரியாயே *
புனித யூதா ததேயுவே *
திருகுடும்பத்தின் உறவினரே *
மாட்சிமை மிக்க அப்போஸ்தலரே *
இறைவனின் உத்தம மாணாக்கரே *
புதுமைகள் பலவும் பொழிபவரே *
வேதத்தை பரப்பும் யாத்தீரீகரே *
வேத விசுவாச சாட்சியே *
தரித்திரத்தை நேசித்தவரே *
தாழ்ச்சிக்கும் பொறுமைக்கும் மாதிரியே *
புனித கற்பின் லீலிமலரே *

---

* எங்களை தயை பண்ணி இரட்சியும்

தேவ அன்பின் தீபமே *
இறையருளின் பேழையே *
பேய்களை நடுங்க செய்பவரே *
திருச்சபையின் தூணே *
துன்புறுவோரின் ஆறுதலே *
பாவிக்காய் பரிந்து உரைப்பவரே *
திக்கற்றோரின் சகாயமே *
திகைக்கிறவரின் பிரகாசமே *
நம்பிக்கை இழந்தோரின் ஊன்றுகோலே *
வியத்தகு அற்புதம் செய்பவரே *
தெய்வ வரங்களைத் தருபவரே *
அழைத்ததும் உதவும் உபகாரியே *
எங்களின் அன்பு மெய்காப்பாளரே *
பன்னிரு சீடருள் ஒருவரே *
எங்கள் ஊரின் காவலரே *
உலகத்தின் பாவங்களை போக்கும் உத்தம செம்மறிபுருவையாம் உன்னத இயேசு கிறிஸ்துவே
எங்கள் பாவங்களை போக்கியருளும்
எங்கள் மேல் இரக்கமாயிரும்
எங்கள் பிராத்தனைக் கேட்டருளும்.

---

* எங்களை தயை பண்ணி இரட்சியும்

## 12. விசுவாசிகளை ஆசீர்வதித்தல்.

(இங்கே குருவானவர் விசுவாசிகள் தீர்த்தத்தால் மந்திரிப்பார்)

(முழந்தாளிடவும்)

எல் : ஆண்டவரே, ஈசோப் புல்லினால் என் மேல் தெளிப்பீர்.
நானும் தூய்மையாவேன்.
நீரே என்னைக் கழுவ
நானும் உறைபனி தனிலும் வெண்மையாவேன்.
இறைவா உமது இரக்கப் பெருக்கிற்கு ஏற்ப
என் மேல் இரக்கங் கொள்வீர்
பிதாவும் சுதனும் தூய ஆவியும்,
துதியும் புகழும் ஒன்றாய்ப் பெறுக !
ஆதியிலே இருந்து போல இன்றும்
என்றும் நித்தியமாகவும் – ஆமென்.

குரு : ஆண்டவரே எங்களுக்காக உமது இரக்கத்தைக் காட்டியருளும்.

எல் : உமது மீட்பை எங்களுக்கு தந்தருளும்.

குரு : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

எல் : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

எல் : உம்மோடும் இருப்பாராக.

குரு : செபிப்போமாக

எல் : இரக்கம் மிகுந்த தந்தையே / ஆறுதல் அளிக்கும் இறைவா / நீர் படைத்த உயிர்களை / உம் இரக்கப் பெருக்கத்தால் பராமரித்து / ஆத்துமத்திற்கு மட்டுமன்று / உடலுக்கும் குணம் தரும் அருளைக் / கருணையுடன் பொழிகின்றீர். பிணி நோயால் வருந்தும் / உம் பக்தர்களை / பாதுகாத்தருளும். பரிசுத்த மரியாளின் திருமகனும் உலக மீட்பரும் / ஆண்டவருமான இயேசு நாதர் / தம் அப்போஸ்தலர் புனித யூதாததேயுசுடையவும் / எல்லா புனிதர்களுடையயும் / புண்ணிய பலன்களாலும் / மன்றாட்டுக்களாலும் எங்களுக்குக் / கருணையும் இரக்கமும் காட்டுவாராக /.

குரு : எல்லா வல்ல சர்வேசுரன், பிதா, சுதன், பரிசுத்த ஆவி உங்களை ஆசீர்வதிப்பாராக !

எல் : ஆமென்.

## 13. நோயாளிகளை ஆசீர்வதித்தல்.

குரு : செபிப்போமாக

எல் : ஆண்டவரே / உடல் நோயால் வருந்தும் உமது ஊழியரைப் பாரும் / நீர் உண்டாக்கிய ஆன்மாக்களுக்கு ஆறுதல் தாரும். / நாங்கள் துன்பங்களினால் தூய்மையடைந்து உமது இரக்கத்தினால் விரைவில் குணமடையும் படி / அருள் புரிவீராக / எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் / ஆமென்.

குரு : ( வலக்கரத்தை நீட்டி ) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பாதுகாக்க உங்கள் நடுவிலும், உங்களைக் காப்பாற்ற உங்களுக்குள்ளும் உங்களுக்குக் காவலாயிருக்க உங்களுக்குப் பின்னும், உங்களை ஆசீர்வதிக்க உங்கள் மேலும் இருப்பாராக. பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே

எல் : ஆமென்.

# 1. நவநாள் செபங்கள்

அப்போஸ்தலரும் வேதசாட்சியுமான புனித யூதா ததேயுசே / நீர் நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நெருங்கிய உறவினருள் ஒருவராயிருக்கிறீர். புண்ணியத்திலும் புதுமை வரங்களிலும் மகா கீர்த்தி பெற்றவர் / உம்மை மன்றாடுகிறவர்களுக்காகத் தவறாமல் மனு பேசுகிறீர் ! திக்கற்றுத் தயங்குவோருக்கு விசேஷப் பாதுகாவலர் நீர் ! நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கை நீர் !

இந்த உமது வல்லபத்தில் நம்பிக்கை வைத்து இதோ நான் உம்மை நாடி வருகிறேன். எனக்கு மிகவும் அவசரமான இந்த வேளையில் உதவி புரியும்படி உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

( இங்கே வேண்டியதை விசுவாசத்துடன் கேட்கவும் )

ஓ ! தயாள இருதய ததேயுசே ! இனிமேல் உள்ள என் வாழ்நாட்களில் உம்மை எனது சிறப்பு பாதுகாவலராக வணங்குவேன் என்றும், எங்கள் அவசரங்களில் உதவி செய்ய நீர் வல்லமை மிகுந்தவரும் தீவரமாய்ப் பரிந்து

பேசுகிறவருமாயிருக்கிறீர் என்ற உமது பக்தியை மக்களிடையில் பரவச் செய்வேன் என்றும் உறுதியாய் வாக்கு அளிக்கிறேன்.

புனித யூதா ததேயுசே, எங்களுக்காகவும், உமது உதவியை மன்றாடும் அனைவருக்காகவும் வேண்டிக்கொள்ளும் ஆமென்.

(1 கர் 1 மங் 1 திரி)

## 2. எவ்விதமான துன்ப வேளைகளிலும் புனிதரின் உதவியை அடைவதற்குள்ள செபம்.

அப்போஸ்தலரான புனித யூதா ததேயுசே திருக்குடும்பத்தின் உறவினரே, மகிமை பிரதாபமிக்க வேத சாட்சியே, புதுமை வரங்களில் பேர் பெற்றவரே, மன்றாடுவோர்க்குத் துரிதமாய் உதவி புரியும் பேருபகாரியே, துன்பங்களால் நைந்து அவசரமாய் உமது உதவியை நாடி வருவோருக்கு வெகு பிரமாணிக்கமாய் உதவி செய்வதில் வல்லபம் மிக்கவரே, இதோ யாவராலும் கைவிடப்பட்ட நிலையிலிருக்கும் நான் உமது சன்னிதானத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

உலகில் எங்கும் நீர் திக்கற்றவர்களின் சகாயம் என்று கொண்டாடப்படுகிறீர் ! சர்வேசுரன் உமது மூலமாய்க் கேட்கும் மன்றாட்டுகளை ஒரு போதும் புறக்கணிப்பதில்லையாமே ! இதோ உமது அடைக்கலத்தை அண்டிவந்த அடியேனை உமது கருணைக் கண்களால் நோக்கியருளும். என் துன்பங்களை தாங்கமுடியாமல் என்னை நான் வெறுத்து, அகன்ற பாலைவனத்தின் நடுவே தனியாய் அகப்பட்டவனைப் போல் அலறி ஓலமிட்டும் பிரலாபிக்கின்றேன். பயமும் அங்கலாய்ப்பும் திரண்ட மேகம் போல் என் கண் முன்னே நிற்கின்றன. என் சஞ்சலங்கள் எக்கணம் என் மேல் பேரிடி போல் விழுந்து என்னை அமுக்கி விடுமோ என்று பதறுகிறேன்.

நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையான ஓ! புனித யூதா ததேயுசே, சர்வேசுரனிடத்தில் எனக்காக மனுப்பேசி என்னை இந்தச் சங்கடமான சந்தர்ப்பத்திலிருந்து காப்பாற்றியருளும் !

என்றென்றைக்கும் சர்வேசுவரனுடைய மகிமைப் பிரதாபத்தைப் பாடி, உம்மைத் துதித்து, உமது வல்லமையுள்ள மன்றாட்டினால் நானடைந்த நன்மைகளைப் பிரசித்தப்படுத்தி, சர்வேசுரனுக்குப் பிரியப்பட நடந்து, இறுதியாய் உம்முடன் நித்திய பேரின்ப பாக்கியத்தை, நானும் அடையும்படி கிருபை செய்தருளும். ஆமென்.

## 3. நவநாள் செபம்.

மகிமை மிக்க அப்போஸ்தலரே, வேதசாட்சியே, இயேசுவின் உறவினரே, புனித யூதா ததேயுசே, அநாகரீக மக்களிடையிலும், பாரின் பல பாகங்களிலும் பரமனின் திருமறையைப் பரப்பியவரே, ஆண்டவரின் அமுதமொழியின் வல்லமையால் அனேகரை வேதத்தில் சேர்த்தவரே ! இதோ உம்மை நான் அண்டி வந்தேன். இன்றிலிருந்து நான் என் சகல பாவ பழக்கங்களை விட்டு விடவும், சகல பொல்லாத நினைவுகளிலிருந்து காப்பாற்றவும் படுவேனாக ! என் இன்னல் இடையூறு துன்ப துரித வேளைகளிலெல்லாம் எனக்கு உதவி புரியும்.

( இங்கே வேண்டியதைக் கேட்கவும் )

இறுதியில் பத்திரமாய்ப் பரலோகம் சேர்ந்து, உம்முடன் பிதா, சுதன் பரிசுத்த ஆவி, என்னும் மகா பரிசுத்த தமதிரித்துவத்தை என்றென்றைக்கும் வணங்கிட உதவி செய்வீராக !

– ஆமென்.

# பாடல்கள்

## *1. புனித யூதாவே*

புனித யூதாவே புகழ்சேர் புனிதா
இனிதே பொழிவீர் வரங்களையே
பிறப்பில் யேசுவின் உறவானீர் – புவி
வாழ்வில் அவரைப் பின் சென்றீர்
இறப்பில் மறையின் சான்றானீர் – மறு
வாழ்வை என்றும் பெறலானீர்.
அன்பால் எரிந்து அனலானீர் – இறை
அன்பை யெங்கும் தரலானீர்
நன்மை செய்து நினைவானீர் – இறை
பணியில் அன்று நிலையானீர்.
துன்பம் நீக்கித் துணையானீர் – வரும்
துயரம் போக்கித் தூணாவீர்
இன்பம் பெருக்கிக் கோலாவீர் – பெரும்
இருளும் ஒளிரும் ஒளியாவீர்.

## *2. புவியில் புதுமை புரிபவரே*

புவியில் புதுமை புரிபவரே
புனித யூதா ததேயுசே
புவியோர் எம்மைப் புரிந்திடுவீர்
புதிய வாழ்வும் தந்திடுவீர்.

திருமறை போற்றும் போதகரே
திக்கற்றோரின் காவலரே
இறைவன் இயேசுவின் சாயலையே
நெஞ்சில் தரித்துக் கொண்டவரே.

யேசுவின் அரசை வளர்த்திடவே
எழுந்த பெரும் அப்போஸ்தலரே
யேசுவின் நெருங்கிய உறவினரே
எம்குறை தீர்த்தருள் புரிவீரே.

## 3) இன்னிசை விளங்கும் கீதம்

இன்னிசை விளங்கும் கீதங்களில்
இதயம் மகிழ்ந்து பாடிடுவோம்
அன்புடன் தந்தையின் பாதங்களில்
அனைவரும் ஒன்றாய் கூடிடுவோம்.

ஏசுவின் சாயலை நெஞ்சினிலே
ஏந்திடும் பெருமை அடைந்தாரே
எதிசா நாட்டு அரசனையும்
இதனால் நலம் பெறச் செய்தாரே

ஏசுவின் அரசு வளர்த்தோங்க
எழுந்த அப்போஸ்தலர் இவரே
புதுமைகள் செய்யும் வல்லவராம்
புனித ததேயு இவரே.

எண்ணரும் நன்மைகள் புரிகின்ற
ஏசுவின் உறவினர் இவரே
கண்ணீர் வழியும் துன்பத்திலும் கருணை
செய்பவர் இவரே.

## 4. புவியோர் போற்றும் தூயவர்

புவியோர் போற்றும் தூயவரே
புனித யூதா ததேயுசே
மகிழ்வுடன் உம்மை வாழ்த்துகிறோம்
மன்றாட்டை நீர் கேட்டருளும்.

பிறப்பினில் யேசுவின் உறவானீர்
பெருமைகள் இதனால் பெறலானீர்
சிறந்த அப்போஸ்தலருமானீர்
திருச்சபை மக்களின் துணையானீர்

நன்னெறி காட்டும் போதகரே
நம்பிக்கை யிழந்தோர் நம்பிக்கையே
அன்புடன் அணைக்கும் தந்தையரே
அடைக்கலம் வழங்கும் காவலரே.

## 5. புனித யூதாவுக்குப் புகழ்மாலை

*மெட்டு : அலைகடல் ஒளிர்மீனே (அ)*
*இராஜனாம் இயேசுவுக்கு*

புனித யூதாவே – உம்மைப் – பணிந்து
புகழ்ந்து கொண்டாடுமெமை
இனிதுகாத் தாண்டிடவே – வேந்தன்
இயேசுவை வேண்டிடுவீர் !

துன்பமாம் கடல் நடுவே – வருந்தித்
துடித்துத் துயர்படுவோர்
இன்பவான் கரைசேரத் – துணையாய்
இலங்கும் அப்போஸ்தலரே

தற்பரன் உமக்களித்த – அரிய
தனிப்பெரும் சலுகையினால்
பற்பல அற்புதங்கள் – புரியும்
பண்பினை என்சொல்வோம்

திருமறை செழித்திடவே – உயிரைத்
தியாகஞ் செய்தே உடலின்
குருதியெல்லாம் சொரிந்த – வீரக்
குலமணியே வாழி !

நம்பி வந்தோர்களை நீர் – எந்த
நாளுங் கைவிட்டதில்லை
செம்மையாய் ஆதரித்து – அன்பாய்த்
தீர்த்திடுவீர் தொல்லை

யேசுவின் நற்செய்தி – கூறி
சோர்வின்றி பணியாற்றி

மாசுற விண்சுடர்போல் – விளங்கும்
மாதவனே வாழி.

## 6. புனித ததேயு எம் பாதுகாவல்

1. புனித ததேயு எம் பாதுகாவல் நீர்
புண்ணிய பாதைக்கு வழிகாட்டி நீர்
பூவுலகம் புகழ்ந்தேற்றும்
பரமனின் பக்தரும் நீரல்லோ.

2. அறநெறி நின்ற செல்வரும் நீர்
மறச்செயல் வென்ற வீரரும் நீர்
அருள் உளம் கொண்டு அணைத்திடுவீர்
இருளினை அகற்றிடும் தீபமல்லோ

3. அல்லல் உற்றோருக்கு அடைக்கலம் நீர்
ஆதரவென்றே நாடி வந்தோம்
இத்தர மீதினில் எமக்குதவி
இன்ப வீட்டினில் சேர்ந்திடுவீர்

## 7. புகழைப் பாடுவோம் மெட்டு : அருளை பொழிபவர்

புனித ததேயுவின் புகழை பாடுவோம்
புண்மை நீக்கி நன்மை நல்கும்
அருளை வேண்டுவோம்

1. வேதம் காக்கவே – தியாகம் செய்தவா
வேத சாட்சியாய் – மோட்சம் சேர்த்தவா

2. பாவம் இன்றியாம் – ஞாலம் வாழ்ந்திட
நேய யேசுவை – நாளும் வேண்டிடுவாய்

### 8. பாதுகாவலே

*மெட்டு : வான்லோக ராணி*

பாது காவலே புனித ததேயுவே
பாலர் எமை பாதுகாத்தாளவா

1. விண்ணோர்கள் போற்றிடும் புனிதன் நீ
மண்ணோர்கள் துதித்திடும் தாதை நீ
பாவமேதும் இல்லா தூயன்
பாவிகளின் அடைக்கலம் நீ
பாதுகாத்து ஆளும் அண்ணல் நீ – பாது

2. இயேசுவின் நேச நல் சீடனே
செம்மைசேர் மோட்சமே சேர்ந்திடாய் – பாது

3. வானேறும் வாசலே பொற்கோவே
வாழ்த்துவோம் எம்மை நீ ஆதரி.

## இயேசு கற்பித்த இரக்கத்தின் செபமாலை

( சாதாரண செபமாலையில் சொல்லுவது )
பிற்பகல் 3 மணிக்கு பொருத்தமான சிறு செபம்
(செபமாலை ஆரம்பத்திலும் சொல்வது நன்று )

இயேசுவே ! நீர் மரித்தீர், ஆனால் இந்த மரிப்பு ஆன்மாக்களின் வாழ்க்கை ஊற்றாகவும் இரக்கத்தின் கடலுமாகவும் வழிந்தோடியது. ஓ! வாழ்வின் ஊற்றே !

கண்டு பிடிக்க முடியாத இறைவனின் இரக்கமே ! உலக முழுவதையும் உம்முள் அடக்கி உமது இரக்கம் முழுமையும் எம்மீது பொழிந்தருளும்.

இயேசுவின் இருதயத்திலிருந்து இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே ! தண்ணீரே ! உம் மீது நம்பிக்கை வைக்கிறேன் ( மும்முறை )

கர்த்தர் கற்பித்த செபம்
மங்கள வார்த்தை செபம்
விசுவாச மந்திரம்

**ஜெபமாலையின் பெரிய மணியில் :**

நித்தியபிதாவே! எங்களாண்டவரும் உமது நேச மகனுமான இயேசுகிறிஸ்துவின் உடலையும் உதிரத்தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும் எங்கள் பாவங்களுக்கும் அகில உலகின் பாவங்களுக்கும் பரிகாரமாக உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம்.

**செபமாலையில் சிறிய மணியில் :**

அவரது வேதனை நிறைந்த பாடுகள் வழியாக எம்மீதும், அகில உலகின் மீதும், இரக்கமாயிரும்.

**முடிவில் :**

புனித இறைவா, புனித எல்லாம் வல்லவரே, புனித நித்தியரே, எங்கள் மீதும், அகில உலகின் மீதும் இரக்கமாயிரும் . ( மும்முறை).